**செய்தி வெளியீடு எண்: 853** **நாள்: 29.11.2019**

இன்று **(29.11.2019)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால், சென்னை, கோயம்பேட்டில் நிறுவப்பட்டுள்ள, நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை

---

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

கொடுங்கையூரில் நடைபெற்ற மூன்றாம் சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழாவில், கோயம்பேடு பகுதியில் 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று நான் கூறியிருந்தேன். அதன்படி, இன்று கோயம்பேட்டில் 486 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலைய திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றி கண்டார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர் நிலைகளின் கொள்ளளவை அதிகரித்து பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவுநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும் “**நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்**” என்ற தீவிர மக்கள் இயக்கத்தை 7.8.2019 அன்று நான் துவக்கி வைத்தேன்.

இந்த தீவிர இயக்கத்தில் மழைநீர் சேகரித்தல், குடிமராமத்து திட்டத்தின் மூலம் நீர்நிலைகளை பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகரித்தல், நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல், பயன்படுத்தப்பட்ட

நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன் மூலம் நன்னீருக்கான தேவையைக் குறைத்தல், இதன் மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக் கோட்பாட்டினை தீவிரமாகக் கடைபிடித்தல் போன்ற பல்வேறு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், உபயோகிக்கப்பட்ட ஒவ்வொரு துளி நீரும் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் உபயோகத்திற்கு கொண்டுவர வேண்டும். பொதுவாக கழிவு நீரில் உள்ள அந்த அசுத்தத்தை நீக்கி அனைவரும் அந்த நீரை பருகக் கூடிய அளவிற்கு அந்த நீரை சுத்திகரிக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை இன்றைக்கு நாம் திறந்து வைத்திருக்கின்றோம்.

இந்த கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து தொழிற்சாலைகள் பயன்படுத்த தகுந்த நீராக மாற்றம் செய்யும் மறுசுழற்சி முறை தற்பொழுது நடைமுறையில் உள்ளது. இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு மூன்று நிலைகளில் நடைபெறுகிறது.

முதல்நிலை சுத்திகரிப்பில், கழிவுநீரை தற்காலிகமாக தேக்கி வைக்க வேண்டும். அதில் கடின திடப் பொருட்கள் யாவும் அடியில் படிந்தும், எண்ணெய் மற்றும் எளிய திடப்பொருட்கள் மேற்பரப்பில் மிதக்கும். அடியில் படிந்த மற்றும் மிதக்கும் பொருட்கள் நீக்கப்பட்டு, எஞ்சிய தண்ணீர் இரண்டாம் சுத்திகரிப்புக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

இரண்டாம் நிலை சுத்திகரிப்பில் நுண்கிருமிகளை பிரித்து எடுத்து நீக்கப்படுகிறது.

மூன்றாம் நிலை சுத்திகரிப்பு என்பது வேதி முறையிலோ, வடிகட்டுதல் முறையிலோ, இரண்டு நிலைகளுக்கு பின்பும் சுத்திகரிக்கப்படுவதாகும். இவ்வாறு மூன்றாம் நிலை சுத்திகரிப்பிற்குப் பின்னர் கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீரை நன்னீருக்குப் பதிலாக நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கோ, விவசாயத்திற்கோ, தொழில் நிறுவனங்களுக்கோ அல்லது குடிப்பதற்கு கூட பயன்படுத்தலாம். இதன் மூலம் இப்பணிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நன்னீர் குறைக்கப்பட்டு, அந்த நன்னீர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என்பதை இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

எனவே தான் மாண்புமிகு அம்மாவின் அரசு மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கழிவுநீர் மறு சுழற்சி மூலமாக தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் நீர் வழங்கும் முறை 1993ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு, தற்போதும் பயன்பாட்டில் உள்ளது.

சென்னை மாநகரில் அதிகரித்து வரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து நீர் வழங்கும் பொருட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, கோயம்பேடு மற்றும் கொடுங்கையூர் பகுதியில் தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க முறையே 2012–13 மற்றும் 2014–15 ஆம் ஆண்டுகளில் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, இந்தியாவிலேயே மிகப்பெரிய மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை 1.10.2019 அன்று கொடுங்கையூரில் நான் துவக்கி வைத்தேன். இதன் மூலம் வடசென்னை, மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, 486 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன். இதன் மூலம் வடசென்னை மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தேவைகளுக்காக தற்பொழுது தினசரி வழங்கப்பட்டு வரும் 40 மில்லியன் லிட்டர் நன்னீருக்குப் பதிலாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட உள்ளது.

இவ்விரு நிலையங்கள் முழுமையாக செயல்படுவதன் மூலம் சென்னை மாநகரில் மொத்தமாக உருவாகும் கழிவுநீரில் 20 சதவீதம் அளவிற்கு மறுசுழற்சி

செய்யப்படும். இதன் மூலம் நாட்டிலேயே அதிகபட்சமாக கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நன்னீர் இனிமேல் சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும். இத்துடன் ஏற்கனவே சென்னை மாநகர் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டங்களின் மூலம் கிடைக்கும் நீரையும் பயன்படுத்தினால், சென்னை நகருக்கு பருவமழை பொய்த்தாலும், தொடர்ந்து குடிநீர் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை உறுதியிட்டு கூறுகிறேன்.

நன்னீரைப் பாதுகாக்கும் பொருட்டு, கழிவுநீரை சுத்திகரித்துப் பயன்படுத்துவதற்கான இதுபோன்ற திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

**நதி நீர், கழிவு நீர், குடிநீர் என அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை பெருமையுடன் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.**

கடந்த சில நாட்களாக நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, 5 புதிய மாவட்டங்களை துவக்கி வைத்தும், மரியாதைக்குரிய ராமசாமி படையாச்சி அவர்களுக்கு நினைவு மண்டம் திறந்து வைத்தும், விழுப்புரத்தில் சட்டக் கல்லூரிக்கான கட்டட வளாகத்தை திறந்து வைத்தும், மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கியும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ஏற்கனவே முடிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கி வைத்தும், இன்று இந்த மூன்றாம் நிலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கி வைத்தும் உள்ளேன். இதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்த கால அளவில் நல்ல பல அரிய திட்டங்களும், நலத் திட்ட உதவிகளும் கிடைத்துள்ளன என்பதை பெரு மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக் கொள்ளும் அதே சமயத்தில், ஒரு சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன்.

ஒரு வணிக நிறுவனத்தில் பணிபுரிந்த ஒருவர் பதவி உயர்வின் காரணமாக, அதே நிறுவனத்தின் தலைமையகத்திற்கு பணிமாற்றம்

செய்யப்பட்டார். வந்து சேர்ந்திருக்கும் ஆள் எப்படிப்பட்டவர் என்பதை அறிய, தலைமையகத்தின் மேலாளர் பழைய மேலாளரிடம் பேசினார்.

"இந்த ஆள் எப்படிப்பட்டவர்?" என்று கேட்டார்.

"கெட்டிக்காரர்'' என்று பதில் சொன்னார் பழைய மேலாளர். ''எத்தனை ஆண்டுகள் உங்கள் கிளையில் இவர் பணி செய்தார் ?" என்று கேட்டார் புதிய மேலாளர்.

"நான்கு வருடங்கள்" என்று பதில் சொன்னார் பழைய மேலாளர்.

"என்ன ? 4 வருடங்களா ? நான்கு மாதங்கள் என்றல்லவா இவர் எங்களிடம் கூறினார்" என்று திரும்ப கேட்டார் தலைமையகத்தின் மேலாளர்.

"அவர் சொன்னது உண்மைதான். ஆனால் அவர் பணி செய்தது நான்கு வருடங்கள் தான்" என்று நிதானமாகச் சொன்னார் பழைய மேலாளர்.

''எது உண்மை ? 4 மாதங்களா ? 4 வருடங்களா ?

ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்க முடியும்'' என்று தலைமையக மேலாளர் கேட்டார்.

"இல்லை ! இரண்டும் உண்மைதான்''.

அவர் நான்கு மாதங்கள்தான் இங்கு இருந்தார். ஆனால் நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகளை நான்கே மாதங்களில் திறம்பட செய்து முடித்தார்.

"இரண்டும் உண்மைதானே !'' என்றார் பழைய மேலாளர்.

இதுபோன்று மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்று

**நடந்து வருவதோ மூன்றாம் ஆண்டு,**

**நடத்தி முடிக்கப்பட்டதோ 30 ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டிய பணிகள்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்த இனிய தருணத்தில் நான் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் எளிய முறையில் கழிவு நீர் இணைப்பு பெறுவதற்கான அறிவிப்புகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வெளியிடுகின்றேன்.**

சென்னை குடிநீர் வாரியத்தால் தற்சமயம் மக்கள் சாசனப்படி 30 நாட்களில் கழிவுநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நடைமுறையில் முழுத்தொகையும் முன்னரே செலுத்தி, அனைத்து ஆவணங்களும் பொதுமக்கள் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. கழிவுநீர் இணைப்புக்கான பணியினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமப்படுகிறார்கள் என்று உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கத்தோடு 2 புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

1) **அழைத்தால் இணைப்பு :** இத்திட்டத்தில் சென்னை பெருநகரில் உள்ள தரை தளம் மற்றும் இரண்டு தளங்கள் வரையுள்ள கட்டடங்களுக்கு, பொதுமக்கள் சென்னை குடிநீர் வாரியத்திற்கு 45674567 தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ பதிவு செய்தவுடன் எந்தவித ஆவணங்களும் இன்றி எளிய நடைமுறையில் கழிவு நீர் இணைப்பு வழங்கப்படும்.

2) **இல்லந்தோறும் இணைப்பு :** இத்திட்டத்தில் விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை கட்டமைப்புகளுடன் கழிவுநீர் இல்லாத வீடுகளுக்கு சென்னை குடிநீர் வாரியமே தாமாக கழிவு நீர் இணைப்பு வழங்கும்.

மேற்படி இரண்டு திட்டங்களிலும் பொதுமக்கள், கழிவுநீர் இணைப்பு கொடுத்த பின்பு, சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கழிவுநீர் கட்டணத் தொகையை ஒரே தவணையில் முழுமையாகவோ அல்லது ஐந்து வருடத்திற்குள் 10 தவணைகளாகவோ, வரி மற்றும் குடிநீர் கட்டணத்துடன், செலுத்த ஏதுவாக

இத்திட்டங்கள் **2.12.2019** முதல் நடைமுறைக்கு வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**